<u>சார்பு நீதிமன்றம், சத்தியமங்கலம்</u>

<u>O.S. No.323/2023</u>

2026–ம் ஆண்டு ஜனவரி மாதம் 27–ஆம் நாள் வா.சா.1 சாட்சி திரு.செந்தில்குமார் என் முன் சாட்சியாக விசாரிக்கப்படுபவர். 1969ம் ஆண்டு 24வது சட்டப்பிரிவு 4(1) ஏற்பாட்டின்படி உயர்திரு.கே.எஸ்.ஷபீனா, பி.ஏ., பி.எல்., சார்பு நீதிபதி, சத்தியமங்கலம் அவர்களால் ஆணையிட்டு உறுதி கூறப்படுகிறது.

| | |
|---|---|
| பெயர் : திரு.செந்தில்குமார் | தொழில் : |
| த/பெ : பழனிச்சாமி | கிராமம் : வடக்குபேட்டை |
| வயது : | தாலுக்கா : சத்தியமங்கலம் |

<u>வா.சா.1 : முதல் விசாரணை:</u>

நான் இவ்வழக்கில் வாதி ஆவேன். என் தரப்பில் சாட்சியமாக விசாரணை செய்ய பிரமாணவாக்குமூல பத்திரம் தாக்கல் செய்துள்ளேன். மேற்படி பிரமாணப்பத்திரிக்கையில் கண்டுள்ள சங்கதிகளை அறிவேன். எனது நிரூபண வாக்குமூலத்தை முதல் விசாரணையாக ஏற்ககோருகிறேன். அதிலுள்ள கையொப்பம் என்னுடையது தான்.

<u>ஆவணங்கள் குறியீடு செய்யப்படுகிறது.</u>

25.01.2017ம் தேதியிட்ட பிரதிவாதியின் பெயரில் ஏற்படுத்தப்பட்ட தானசெட்டில்மெண்ட் ஆவணம் அசல் வா.சா.ஆ.1 ஆகவும், 21.10.2021ம் தேதியிட்ட கிரையப்பத்திரம் அசல் வா.சா.ஆ.2 ஆகவும், 18.04.2023ம் தேதியிட்ட வாதியின் வழக்கறிஞர் அறிவிப்பு அலுவலக நகல் வா.சா.ஆ.3 ஆகவும், 25.04.2023ம் தேதியிட்ட

பிரதிவாதியின் பதில் அறிவிப்பு அசல் வா.சா.ஆ.4 ஆகவும், 10.07.2023ம் தேதியிட்ட சொத்திற்கான பட்டா கணினி நகல் வா.சா.ஆ.5 ஆகவும், 10.07.2023ம் தேதியிட்ட வழக்கு சொத்தின் சிட்டா கணினி நகல் வா.சா.ஆ.6 ஆகவும் ஆவணங்கள் குறியீடு செய்யப்படுகிறது. மேற்படி ஆவணங்களின் பரிசீலனையில் தாவாப்படி பரிகாரம் வழங்க கோருகிறேன்.

பிரதிவாதி தரப்பு வழக்கறிஞரின் வேண்டுகோளுக்கிணங்க குறுக்கு விசாரணைக்காக வழக்கு ஒத்தி வைக்கப்படுகிறது.

திறந்த நீதிமன்றத்தில் என்னால் அழைக்கப்பட்டு சாட்சியிடம் படித்து விளக்கமளித்து, அவர் சரியானவை என்று ஒப்புக் கொண்டு என் முன்பாக கையொப்பம் செய்தார்.

சார்பு நீதிபதி,
சத்தியமங்கலம்.